

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## கண்ணீருக்குப் பின்னால், கெம்பீர அறுவடை உண்டு!

அவரது சொந்த ஜனங்களின் 'கண்ணீருக்குப்' பின்னால் 'மகிழ்ச்சியின்' கெம்பீர அறுவடை உண்டு! அதன் இரகசியம் என்ன? சங்கீதம் 126:6 அதை வெளிப்படுத்துகிறது: ஆம், அவர்கள் காரிருள் சூழ்நிலைக்குள் அழுதுகொண்டு போனாலும், **கூடவே விதைப்பதற்கு 'வாக்குத்தத்த வசனங்களும்' 'விசுவாசமும்' மாறாத 'தேவ கிருபையையும்' அள்ளித் தூவி முன்சென்றார்கள்!** அவர்கள் 'விதைத்த' அத்தனையும் தேவனுடைய பார்வையில் நித்திய மதிப்புடையவைகள்! ஆகவே, அந்த விதைகள் வெறுமையாய் திரும்பாமல் கெம்பீர அறுவடையை அவர்களுக்கு மீட்டுத்தந்தது! ஆம், துயர சூழ்நிலை முடிந்து அவர்கள் திரும்பி வந்தபோது "திரளான ஆசீர்வாதங்களை" சுமந்து வந்து கெம்பீரித்தார்கள்! இனியும், உங்கள் கண்ணீரின் மத்தியில் "விதைகளை" சுமந்து செல்ல மறவாதீர்கள்! வாக்குதத்தம் செய்தவர் உண்மையுள்ளவர்! நிச்சயமாய் கெம்பீர அறுவடையைத் தருவார்!!

_tr

பெட்டகம் 23

ஆகஸ்ட் 2021

பரல்கள் 08



## உலகத்தைப் பிரித்து வாழும் வல்லமை ‘சிலுவைக்கு’ மாத்திரமே உண்டு!

சபை மாந்தரே கேளுங்கள்: “நம் சபைகளை சீயோன் பர்வதத்தில்” கட்டுவோமாக! இந்த உலகத்தை துணிவுடன் ஏறிட்டு நின்று ‘உலகமே! நாங்கள் நிற்கும் பர்வதம் ஏறி வாருங்கள்!’ என்றே அழைப்பு கொடுப்போமாக! இதற்கு மாறாக ‘எவ்வித கொடிய சூழ்நிலையிலும்’ உலகத்திற்குள் நாம் இறங்கிவிடாதிருப்போமாக! நம் கிறிஸ்தவத்தின் சிங்காரமே சிலுவைதான்:

**அந்த சிலுவையின் முழக்கமோ, மரித்து வாழுங்கள்! பிரிந்து வாழுங்கள்! ஒருபோதும், ஒருபோதும் ஒத்தவேஷத்திற்கு சமரசம் சேராதிருங்கள்! என்ற முழக்கமேயாகும். சிலுவையைக் கண்டடைந்தவர்களில் ஒருவர் கூட, ஒத்த வேஷத்திற்கு தாழ்ந்தது இல்லை!!**

மெய்யான சிலுவை, ஜீவனுக்கும் மரணத்திற்கும் உறுதியான பிளவை ஏற்படுத்தும். இதை காணும், பயந்து வாழும் கோழைகள் “இது அதிக பட்சம்!” எனக் கூக்குரலிடுகிறார்கள். கோழைகளின் இந்த கூக்குரல், மெய்யாகவே சரிதான். ஏனெனில், இந்த பாருலகில் சிலுவை மாத்திரமே அதிகபட்சத்தின் உச்சக்கட்டம்! இதைத்தவிர வேறொன்றல்ல, சிலுவையே முடிவானது!

*-Ed*


**2021 ‘பரலோக பொக்கிஷங்கள்’ – வருட சந்தா ரூ.150.00**

சந்தா புதுப்பிக்காதவர்கள் **ஆகஸ்ட் 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125.00** அனுப்புங்கள். அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும்.


**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்!**
**அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**


வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘சத்தியத்தை புறக்கணித்து’ வாழ விரும்பும் கிறிஸ்தவம்!

*நாகரீக சுக வாழ்வை எட்டிவிட்ட இன்றைய உலகில், கிறிஸ்தவ ஜனங்களும் அதில் ஈர்க்கப்படுவதுதான் மாபெரும் கொடுமை! இவர்களின் நோக்கம் நிறைவேறிட கையாளும் உத்தி என்ன தெரியுமா? முன்பு எவைகளையெல்லாம், வேத அடிப்படையில் “நியாயபூர்வமற்றது” என வைத்திருந்தார்களோ, அவைகளை அவர்களே மீறி “நியாயபூர்வமாய்” மாற்றிடத் துணிந்து விட்டார்கள்! தாங்கள் சுயமாய் செல்லும் வழியைத் தடுத்து, அடைத்து நிற்கும் சத்தியங்களைப் “பிழையென” அறிவித்து, தடைகளை தூக்கி எறிந்துவிட்டு, தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்றத் துடிக்கும் கொடிய காலம் இது! கட்டளையின் 6-வது பிரமாணமான “விபச்சாரம் செய்யா திருப்பாயாக!” என்ற முக்கிய பிரமாணம்கூட இன்று தேய்வடைந்து, “அது எல்லாம், பழைய காலம்” என மழுப்பி.... நாகரீக வளர்ச்சி அல்லது இக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பண்பாடு என, தங்கள் எதிர்பாலர் பாலிய விஷயத்தில், தாராளமாய் புகுந்து, தங்கள் இச்சைகளை நிறைவேற்றும் புதிய கலாச்சாரம் கிறிஸ்தவத்தில் நுழைந்துவிட்டது!*

*இதன் விளைவாய், இன்றைய “இணையதள ஆபாச படக் காட்சிகள்” நம் கிறிஸ்தவப் பிள்ளைகளைக்கூட ஆட்டிப் படைக்கிறது! வயதிற்குவராத பிள்ளைகள்கூட “பாலியல்” பேசும் கொடிய காலம்!! அன்றும் இக்கொடிய செயல்கள் இருந்த போதிலும், இன்று அந்த தீய-சக்கரம் ‘மொபைல்’ போன்ற துஷ் பிரயோகத்தால், பன்மடங்கு வேகமாய் சுழலத் துவங்கி விட்டது!!*

**ஒரு காலத்தில் “பிரமாணங்களே ஒரு தேசத்தை கட்டி எழுப்புகிறது!” என்ற பொன்மொழிகள் மாறி, “பிரமாணங்களை (தங்கள் இச்சைக்கு ஏற்ப) கண்டும் காணாமல் ஒதுக்குவதே இன்றைய வாழ்விற்கு ஏற்புடையது!” என்ற கதியாகிவிட்டது. அது, இன்றுள்ள கிறிஸ்தவ ஜீவியத்திற்குள் பிரவேசித்தது பெரும் துயரம்!**

*ஆம், இன்றைய அனைத்து “தாராளமயமான செயல் களுக்குப்” பின்னால் ஒழிந்திருக்கும் ஆவி என்னவெனில்*

*“பிரமாணங்கள் வேண்டாம்! என்றதோர் ஆவியே” ஆகும்! இவர்களின் அதிகாரபூர்வமான இலக்கு என்னவெனில் “தாங்கள் விரும்பியதை நிறைவேற்ற வேண்டும்!” என்ற ஒரே உள்நோக்கம்தான்! இதையெல்லாம் சகித்துக்கொண்டு, அவைகளைத் தங்கள் சபைகளில் அனுமதிக்கும் கிறிஸ்தவ தலைவர்களும் உண்டு! சத்தியத்திற்கு தலை நிமிர்த்தாத, கோழைத் தலைவர்கள்!!*

*“பிரமாணங்களை கண்டும் காணாமல் ஒதுக்கும்....” இந்த தீய ஆவி, நம் கிறிஸ்தவப் பிள்ளைகளை ஆட்கொண்டு, அவர்களின் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிவதைக்கூட புறக்கணிக்கும் தீதாய் மாறிவிட்டது! கேட்டால், “பிரமாணம் ஒரு பரிசேயத்துவம்.... நாங்கள் வேண்டுவது ஜனநாயகம்!” என, துணிகரமாய் கூறத் துவங்கி விட்டார்கள்!*

**வேதத்தில் “சுயாதீனம்” உண்டா? ஆம், நிச்சயமாய் உண்டு! ஆனால், ஜீவன் தரும் “பிரமாணங்களை எறிந்துவிட்டு” சுய-வழி இச்சைகளை நிறைவேற்றுவதற்கு இந்த சுயாதீனம் வழங்கப்படவில்லை! வேதபூர்வ திசையையே மாற்றும் இவ்வித சுயாதீனம் இவர்களுக்கு பெரும் அழிவையல்லவா கொண்டுவரும்!**

*ஒன்றில் துவங்கும் இவர்கள்..... ஒன்றன்பின் ஒன்றாய் “வேதபூர்வ பிரமாணத்துவத்தை” அவமதித்து “சுயாதீன” சுழல்காற்றில் தங்கள் மனம்போன போக்கில் தாறுமாறாய் போய் கொண்டிருக்கிறார்கள்! தங்கள் “போதைக்குக்கூட” சிறிய அளவில் துவங்கி, அது எல்லாம் ஒன்றுமில்லை என கூறி...... போதை மருந்து வரை சென்று விடுகிறார்கள்! என்ன..... மதுபான தடைச்சட்டமா? அல்லது பிரமாணமா? வேண்டாம், வேண்டாம், நாங்கள் சுயாதீனப் பிரியர்கள் என தாங்களும் கெட்டு பிறரையும் கெடுக்கும் தவறான முன்னோடிகள்! இவ்வாறு, எங்கும் “மனம்போல வாழும்” மோகம் தலைவிரித்து ஆடும் காலமாகிவிட்டது!*

*இவ்வித “சுயாதீன” சூழலில் துன்மார்க்க சுகம் கண்டவர்கள், தேவ வசனங்களையும் அது வழங்கும் பிரமாணங்களையும் “மித மிஞ்சியது” என வழிவிலகிச் செல்லத் துவங்கிவிட்டார்கள்! ‘சத்திய வழி’ சென்றால்தானே ஒரு “குற்ற மனசாட்சி” உருவாகிறது! இப்படியெல்லாம் போராடி “ஓர் சுத்த மனசாட்சியின் வாழ்விற்கு” பிரயாசப்படுவதெல்லாம் அவசியம்தானா? என்றெல்லாம் உள்ளத்தில் அலைகழிக்கப்பட்டு, முடிவில் தங்கள் இருதயத்தை கடினப்படுத்தி, தங்கள் மனசாட்சியின் உணர்த்துதலை கொன்று விடுகிறார்கள்! யார் இவர்கள்? தங்கள் இச்சையின் போக்கில் செல்ல விரும்பிய*

*லௌகீகமான சுக- ஜீவிகள்! வேறு யாரும் அல்ல 'இவர்களே' அந்திகிறிஸ்துக்கள்! ஏனெனில் அந்திக்கிறிஸ்துவின் மறுபெயரே "பிரமாணம் அல்லது சத்தியம் ஏதும் இல்லாதவன்!" என்பதுதான்.*

*இவைகளை எழுதும் நான் யார்? கிறிஸ்தவத்தின் "முழு ஜீவனும்" கொண்டவன்! பல்லாண்டு கிறிஸ்தவ வாழ்வின் அனுபவத்தில் சம்பூர்ண சமாதானமும், நிறைந்த மகிழ்ச்சியும், அனைத்து சூழ்நிலைகளுக்காய் நன்றி சொல்வதையும் கொண்ட பாக்கியம் நிறைந்த கிறிஸ்தவன்! இந்தப் பாக்கியம் எனக்கு எப்படி கிடைத்தது என்றா கேட்கிறீர்கள்? கேளுங்கள்: "வேதத்தில் உள்ள அனைத்து ஆவியின் ஜீவ பிரமாணங்களுக்கும் பெருமகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து, அதை மனதார விசுவாசித்து, நெஞ்சார அன்புகூர்ந்து, அனைத்தையும் கொள்ளைப் பொருளாய் கண்டடைந்தவன்!" பல்லாண்டு வாழ்ந்த என் அனுபவ சாட்சியை நீங்கள் நம்பி.... சத்தியத்தின் மேலான நல்ல விருப்பங்களுக்கும் தீர்மானங்களுக்கும் திரும்புங்கள்!!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## உத்தம சபையில் 'தங்கியிருக்கும் பாக்கியமே' பேரானந்தம்!

*உலகத்திற்கும், ஒத்தவேஷத்திற்கும் தீவிரமாய் பின்னோக்கிச் செல்லும் கிறிஸ்தவ சபைகளைப் பார்த்து, கடுகளவுகூட பின் வாங்காதிருக்க உறுதி கொண்டிருக்கக்கடவோம். இக்கொடிய நாட்களில், நாமோ ஆவியின் வல்லமையால் நிறைந்து, "இந்த பின்மாற்ற திசைக்கு நான் திரும்ப மாட்டேன்! மனமடிந்த கோழை யாய் மாற மாட்டேன்!" என்றே நம் ஆண்டவரிடத்தில் சொல்ல வேண்டும்! நமக்கு நாமே சொல்ல வேண்டும்! அதுவும், இப்போதே சொல்ல வேண்டும்! நம் தோளின் மீது நாமே ஏறி நின்று பிசாசி னிடத்தில் 'அதட்டி' சொல்ல வேண்டும்!* **உத்தமமான கிறிஸ்துவின் சரீரமான சபை இப்படித்தான் இருக்க வேண்டும்!** *தன் தீவிர ஓட்டத்தில் தளர்ந்து, உலகத்தின் வழிக்கு சென்றுவிடக்கூடாது! அல்லது, இன்றைய தரம் குறைந்த கிறிஸ்தவ ஊழிய வழிகளுக்கும் சென்றுவிடக் கூடாது! அவருடைய சரீரத்திலிருக்கும் உத்தமம் நிறைந்த விசுவாசிகள் "இந்த உலகத்தார் மதிப்பீடு செய்து நியாயந்தீர்க்கும் அளவை" தனக்குள்ளும் கொண்டு வந்து சமரசப்படுத்திக் கொள்ளக் கூடாது.*

**கிறிஸ்துவின் ஆவியில் நிறைந்த அவருடைய சரீரம், தாங்கள் புதிய ஏற்பாட்டின் தரத்தின்படி நிலை கொண்டிருப்பதைக் கண்டு அகமகிழ வேண்டும்! இவ்வித தரத்தின் மகிழ்ச்சி ஒன்றே அவர்களின் முதுகெலும் பாக இருக்க வேண்டும்!**

இவ்வித உத்தம விசுவாசம் கொண்ட சபைகள் "வேத வாக்கியங்களுக்கு அப்படியே கீழ்படிவதால்" ஆதி கிறிஸ்தவ மக்கள் என்றே பெயர் சூட்டப்படுவார்கள்! இருக்கட்டும், அது நல்லதுதான்! ஆனால், நாம் அந்த ஆதிநிலையில் திருப்தி அடைந்திடக் கூடாது. நம் ஆண்டவராகிய இயேசுவை முழு மனதாய் அன்புகூர்ந்து பின்பற்றும் சபையோராகிய நாம் "கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்கி வந்துவிட்ட" இந்த காலத்தில், ஏராளமான உலகத்தின் ஆவியையும், குளறுபடிகளையும் எதிர்நோக்கியுள்ளோம்! ஆகவே இப்போது, **ஆதி நிலை அல்ல...... அதைவிட மேலான** உயிர்ப்பிக்கும் வல்லமையும், ஒழுக்கத்தின் பண்பும், இருதய பரிசுத்தமும், உலகத்தை விட்டு வேறு பிரிந்த பரிசுத்த ஜீவியமும் நம்மீது பொழியப்படவே, கர்த்தருடைய ஆவியின் நிறைவை வாஞ்சிப்போமாக!

> **நான் கூறும் தீர்க்கதரிசன வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், அதை கேட்பீர்களாக: "நாம் எதிர்நீச்சல் போட்டு கிறிஸ்தவ விசுவாசத்தையும், கிறிஸ்துவின் போதனையையும், கிறிஸ்துவின் ஜீவியத்தையும் வாழ்ந்துவிட முன்னேறவில்லையென்றால்! தேவனுடைய முகத்தை தேடி, அவருடைய பரிபூரண சித்தம் செய்திட துணிவு கொள்ளவில்லையென்றால்.... நன்றாய் கேளுங்கள், தேவன் நம்மை விட்டு கடந்து சென்று விடுவார்!".**

கர்த்தருடைய ஆவி நம்மைவிட்டு கடந்து சென்றுவிட்டால், "வெறும் கூடாய் இருக்கும் முட்டைகளை" வியாபாரத்திற்கு தூக்கி சென்றவர்களைப்போல் ஆகிவிடுவோம்! செத்தவனை புதைக்கும் நிலைக்குத் தள்ளப்படுவோம்! அன்று, இஸ்ரவேலின் தலைவர்கள் இயேசுவைப் பார்த்து, "நாங்கள் ஒன்றும் வேசியின் பிள்ளைகள் அல்ல! ஆபிரகாமின் பிள்ளைகள்! நாங்கள் இருக்கும் இந்த ஆலயம் தேவனுடைய ஆலயம்!" எனக் கூறினார்கள். அதற்கு இயேசுவோ "நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால், ஆபிரகாமின் கிரியைகளை செய்திருப்பீர்கள்! **அதுஇல்லாமல், இது எங்கள் ஆலயம் என்று மேன்மை பாராட்டுகிறீர்களே....** இந்த ஆலயம் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராமல் எடுபடும் காலம் வந்துவிட்டது!" என்றே தீர்க்கதரிசனமாய் எச்சரித்தார். இயேசு உரைத்த இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை, ரோம பேரரசு கேட்டதில்லை. ஆனால், தேவனுடைய வாக்கு நிறைவேறும்படி, ரோம பேரரசு படையெடுத்து, தங்களுடைய பரிசுத்த ஆலயம் என யூதர்கள் மேன்மைபாராட்டிய அந்த ஆலயத்தை, அஸ்திபாரம் வரை ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடி பெயர்த்து, அந்த பேரரசன் தூக்கி எறிந்தான்! இந்த உலக சரித்திரத்தில்....

**“தேவனுடைய திவ்ய சித்தத்தை நிறைவேற்றத் தவறிய எந்த ஒரு சபையையும் தேவன் விட்டு வைக்காமல், அவைகளைப் புறக்கணித்து கைவிட்டார்” என்றே நாம் இன்றுவரை காண்கிறோம்.**

*பாவ மாந்தர்கள் நிறைந்த உலகில், கிறிஸ்துவின் மறுரூபமடையச் செய்திடும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தவறிய அல்லது தேவ சித்தத்தை நிறைவேற்றத் தவறிய ஊழிய மாந்தர்கள்...... தங்கள் நீண்ட அங்கியை வைத்தோ, பளபளக்கும் தங்கமுலாம் சிலுவையை வைத்தோ, அல்லது தங்களின் நீண்ட வேத கலாச்சாலை பட்டங்களை வைத்தோ, தேவனுடைய மனதை கவர்ச்சிக்க இயலாது! என்பதை, திட்டமாய் அறிந்து கொள்வார்களாக!!*

*20 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்பு யாரை தேவன் எழுப்பினாரோ, அவர்கள் கிருபை மிகுந்த தேவ சித்தத்தில் நிலை கொள்ளாமல், கர்த்தரை உத்தமமான விசுவாசத்திலும், அன்பிலும், தாழ்மையிலும் தொடர்ந்து பின்பற்றவில்லையென்றால்.... தேவன் அவர்களையும் புறக்கணித்திட தயங்கமாட்டார். நான் இங்கு வேதனையுடன் குறிப்பிடுவது எந்த ஒரு தனி நபரையும் அல்ல! சபை என்ற பெயரில் கூடியிருக்கும் கூட்டத்தைப் பார்த்தே பேசுகிறேன்!*

**‘நாம் இப்பொழுது ஒரு பெரிய கூட்டமாய் சேர்ந்து விட்டோம்’ என நீங்கள் கூறிக்கொள்வதெல்லாம், தேவனுக்கு முன்பாக எடுபடாது. அவர் தமது ஆசீர்வாதத்தை திருப்பிக்கொள்வார். எங்கோ இருக்கும் நல்ல இருதயம் கொண்ட ஜனங்களை நாடிச் செல்வார்! யார் அவர்கள்? தேவனை தீராத அன்பினால் நேசிப்பதையும், அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிவதையும் மிகப் பெரிய சொத்தாய் கண்டடைந்தவர்கள்!!**

*விசுவாசிகளாயிருக்கும் தன்னுடைய பிள்ளைகளை தேவன் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார் என நான் அறிந்திருக்கிறேன்! ஆகிலும், தன்னையும் தன் நித்திய வார்த்தைகளையும் புறக்கணிக்கும் சபைகளை விட்டு, தேவன் நிச்சயமாய் தன்னுடைய பிரசன்னமாகிய மேக ஸ்தம்பத்தையும், அக்கினி ஸ்தம்பத்தையும் விலக்கிக் கொள்வார் என, நான் திட்டமாய் அறிந்திருக்கிறதைப் போலவே, நீங்களும் அறிந்து கொள்வீர்களாக!*

*என்னுடைய ஜெபமாயிருப்பதெல்லாம் “பிரியமுள்ள கர்த்தாவே, நான் இருக்கும் இந்த சபையை விட்டு உம்முடைய பிரசன்னத்தை நீர் எடுத்துக் கொள்ள தீர்மானித்திருந்தால், அந்த கொடிய சோகம் நடைபெறும் 24 மணி நேரத்திற்கு முன்பாக, எனக்கு அதை தெரிவியும்! இந்த ஸ்தலத்தை விட்டு வேறு ஒரு ஸ்தலத்திற்கு செல்வதற்காக 24 மணி நேர அவகாசம் மாத்திரமே கேட்கிறேன்!*

*தேவனே, சபை சீரழிந்து சின்னா பின்னமாவதை, அங்கு நின்று என்னால் காண சகிக்காது!" என்பதாகவே இருக்கும்!*

*பிரியமுள்ள சகோதரரே, நாம் எதை வேண்டுமானாலும் இழக்கத் துணியலாம். ஆனால் அவரது மேக ஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமு மாகிய அவரது பிரசன்னத்தை எக்காலத்தும் இழந்துவிடக் கூடாது. அவரது ஷெகினா மகிமை, சுடர்ஒளி பரிசுத்த ஆவியின் வல்லமை கொண்டு, சபையில் எப்போதும் எரிந்து கொண்டேயிருக்க வேண்டும்!* **'தேவன் நம்மோடு இருக்கிறார்' என்ற தொனி மாத்திரமே, நமது ஜெயத்தின் தொனி!** *இந்த சீரான இடத்தைப் பெற்றவர்கள், "எல்லாவற்றையும் இழந்தாலும், ஒரு உத்தம சபையில் தங்கியிருக்கும் பாக்கியத்தை இழந்திட மாட்டோம்!" என்றே அறிக்கை செய்வார்கள். இச்சிக்கப் படத்தக்கவைகளில், ஒரு உண்மை சபையை இச்சிப்பதைப் போல் வேறொரு தித்திக்கும் சுவை எங்கும் இல்லை! ஆமென்.*

*– A.W. டோசர்*

---

## 'என் பக்தி வாழ்வை' மீண்டுமாய் அர்ப்பணித்து மகிழ்ந்தேன்!

*இந்நாட்களில், என் மகளின் பெலவீனத்திற்காக நான் கண்விழித்து பாடுபட்டதினிமித்தம் அடிக்கடி எனக்கு மயக்கம் உண்டானது. மருத்துவர்கள் எனக்கு மருந்துகளை கொடுத்தார்கள். அதேசமயம், "இந்த மயக்கம் உங்கள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடும்" எனவும் எச்சரித்தார்கள்! இப்படியொரு நிலையில், அந்த ஸ்தலத்திலுள்ள சிஸ்டர்மார்கள், கரிசனையான பராமரிப்பு தராமல், அலட்சியப்படுத்தினார்கள். மேலும், உணவு கொண்டு வந்து தரும் சிஸ்டர்மார்களும் 'புறக்கணித்த நிலையில்' என்னை நடத்தினார்கள். தான்தோன்றித்தனமாய், என் ஜீவனத்திற்கு அவசியமான உணவு களைத் தருவதைக்கூட அலட்சியமாய் தடுத்துவிட்டார்கள். என்னை பராமரித்துக் கொள்ள உதவும்படி, என் ஆஸ்தியிலிருந்து ஒரு ரூபாயைகூட என் உதவிக்கென நான் எடுத்துவரவில்லை. இதற்கு மாறாக, பிரான்ஸ் வங்கியிலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட எல்லா பணத்தையும் இங்குள்ள கன்னிமாடம் எடுத்துக்கொண்டது! அப்படியிருந்தும், பணவிஷயத்தில் அவர்கள் என்னிடம் நடந்து கொண்டவிதம் எனக்கு விசித்திரமாயிருந்தது!*

> **எப்படியெனில் "யாருக்கு என்னுடையவைகளையெல்லாம் கொடுத்து விட்டேனோ, அவர்கள் மத்தியில், தேவைநிறைந்தவளாய் நான் நின்றேன்! இங்கிருந்து தொடங்கியே, ஏழ்மையை நான் அப்பியாசப்படுத்திக் கொண்டேன்!"**

*மீண்டுமாக நான் அதிக சுகவீனம் அடைந்தபடியால், தந்தை-லா-கோம்பே அவர்களுக்கு சிஸ்டர்மார்கள் கடிதம் எழுதி, உடனடியாக என்னை வந்து காணும்படி கூறினார்கள். கடிதம் கிடைத்த அந்த மாலை நேரமே, தன் வயதை பொருட்படுத்தாதபடி வெகுதூரம் நடந்து, எங்கள் இல்லத்தை அவர்கள் அடைந்தபோது விடிந்து விட்டது! நான் கூர்ந்து கவனித்தபடி, அவர்களின் ஒவ்வொரு செயலும் ஆண்டவராகிய* **இயேசு கிறிஸ்துவின் நீடிய சகிப்புத் தன்மையை** *பிரதிபலிப்பதாயிருந்தது! அதிகாலையில், அவர்கள் என் இல்லத்திற்குள் பிரவேசித்தவுடன், என் சரீர வேதனை குறைய தொடங்கியதைக் கண்டேன்.*

*நான் சுகம் பெற்றவுடன், கன்னிமாடத்திலுள்ள சிஸ்டர்மார்கள், என் மகள் தங்கியிருந்த விடுதி ஸ்தலத்திற்குச் சென்றுவருமாறு ஆலோசனை கூறினார்கள். அதை ஏற்றுக் கொண்டு, என் மகளின் விடுதிக்குச் செல்ல ஆயத்தமானேன். தந்தை-லா-கோம்பே அவர்கள் எனக்கு உதவியாக, கூட வந்தார்கள். வழக்கம்போல் அந்த பெரிய ஆற்றைத் தாண்டி எங்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டியதா யிருந்தது. பயணம் செய்த சிறிய கப்பல், ஆற்றின் நடுவில், மிக மோசமான புயல் காற்றை சந்திக்கும் நிலை ஏற்பட்டது! அந்த சிறிய கப்பல் கவிழ்ந்துவிடும் நிலைக்கு தாக்கப்பட்டது. அந்த கப்பலின் மாலுமிகள் தந்தை-லா-கோம்பே ஓர் சிறந்த பரிசுத்தவான் என கேள்விப்பட்டு, அவரது ஜெபத்தை வேண்டினார்கள். அவருடைய ஜெபத்தை கர்த்தர் கேட்டு, எங்கள் சிறிய கப்பல் அமைதியானது! டோனான் வந்து சேர்ந்தவுடன், என் சரீரத்தின் பெலவீனமனைத்தும் சுகமானதைக் கண்டேன். டோனானில், 12 நாட்கள் நடந்த 'முகாமில்' கலந்து கொண்டு தங்கியிருந்தேன்:*

> *இந்த முகாமில் ஓர் தொடர்ச்சியான "நிலைத்திருக்கும்* **கற்புத் தன்மைக்கு***" என்னை மீண்டும் புதுப்பித்துக் கொண்டேன். அதுபோலவே இப்போது நான் எதிர்கொண்ட* **'ஏழ்மையின் பங்கில்'** *நிலைத்திருப்பதற்கும் தீர்மானம் எடுத்தேன்! மேலும், தேவனுடைய சித்தமென அவர் எனக்கு உணர்த்திய அனைத்தையும் விசுவாசித்து கீழ்படியவும், என்னை புதுப்பித்துக் கொண்டேன்! நான் செல்லும்* **சபையின் ஊழியங்கள்** *அனைத்திற்கும் கீழ்படிந்து நடக்க உறுதி எடுத்து கொண்டேன்! இயேசுகிறிஸ்துவிற்கு பிரியமாயிருக்கும் படியாக, என் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அவரை கனப்படுத்தி வாழவும் தீர்மானங்கள் எடுத்துக்கொண்டேன்!*

*இந்த முகாமில், கர்த்தருடைய வெளிச்சத்தில் என்னை*

*பரிசோதித்தது என்னவென்றால்* **"கர்த்தரை நேசிக்கும் தூய அன்பில், பூரண கற்புத்தன்மையை நான் கடைப்பிடித்து வாழ்ந்ததை"** *நான் கண்டறிந்தேன். கர்த்தரை நேசிக்கும் தூய அன்பில் யாதொரு பேதமோ அல்லது வேறொரு நாட்டமோ எனக்குள் ஏற்பட நான் அனுமதித்ததில்லை!*

**இயேசு கிறிஸ்துவை தலைமையாய் கொண்ட சபைக்கு முழுமையாய் ஒப்புக்கொடுத்து கர்த்தரை கனம்பண்ண மீண்டுமாய் என்னை அர்ப்பணித்தேன்! இவ்வாறு அந்த முகாமில் எனக்கான அனைத்தையும் 'மீண்டுமாய்' அர்ப்பணித்து புதுப்பித்துக்கொண்டேன்!**

*இவ்வாறு 'நம்மை முழுவதுமாய் இழக்கும்போதுதான்' நாம் கர்த்தருக்குள் பிரவேசிக்கிறோம்! நம்முடைய சித்தம் கர்த்தருடைய சித்தத்திற்குள் கலந்து ஒன்றாகிவிடுகிறது! கிறிஸ்து செய்த ஜெபத்தைப் போலவே "நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்க தயை புரியும்" என்ற பாக்கியம் கிட்டுகிறது (யோவான் 17:21). இவ்வாறாக "நமது சித்தம்" தேவசித்தத்திற்கு சமமாய், அற்புதங்களை வெளியிலும் நிகழச் செய்திட முடியும்!*

*இயேசுவுக்குள் நடந்த அற்புத கிரியையைப் போலவே, நமக்குள்ளும் நடைபெற்றிடமுடியும்! ஏனெனில், கர்த்தரே நம் ஆத்துமாவில் 'தமது சித்தத்தை' வைக்கிறார்... ஆகவேதான், மிகப்பெரும் கிரியைகள் நம் மூலமாய் நடைபெறும்படி செய்கிறார்: நாம் என்ன செய்கிறோம் என்ற நிலை மறக்கப்பட்டு, கர்த்தருடைய சித்தமோ நிறைவேற்றி முடிக்கப்படும் அற்புதம் நிகழ்கிறது!*

*ஆகிலும், சிலர் கூறுவது என்னவென்றால் "அவருடைய சித்தத்தில் நாம் ஒன்றற கலந்திருக்கும்போது,* **நாம் ஏன் அநேக எதிர்ப்பு களை சகிக்கவேண்டியதாயுள்ளது?** *அவருடைய சித்தம் ஆத்துமாவில் வலிமையாயிருக்கும்போது, அந்த வல்லமை, இந்த எதிர்ப்புகளிலிருந்து நமக்கு ஏன் விடுதலை தரமுடியவில்லை?" என்றே கேட்கிறார்கள். இதற்குரிய பதில் என்னவென்றால், "உங்கள் கேள்விக்கு ஒப்பாக காரியங்களை தேவன் உங்கள் சார்பாக நிறைவேற்ற துணிந்தால், அது மாம்சத்தின் விருப்பமாகவும் அல்லது மனுஷீக விருப்பமாகவும் இருக்குமேயல்லாமல் தேவசித்தமாயிருக்காது!" (யோவான் 1:13). இந்த 'மனுஷீகத்திற்கு' நாம் எச்சரிப்புடன் விலகி, பாதுகாத்துக் கொண்டால் "தேவசித்தம்" நம்மில் பூரணமாய் நிறைவேறும்!*

*– மேடம் குயான்*

## சுகந்த பலியாய் ஒப்புக்கொடுத்து, மறுரூபமடையுங்கள்!

ஆராதனையும் (Worship) கர்த்தருடைய ஊழியமும் (Service) ஆகிய இரண்டும் ஒன்றுதான். இந்த இரண்டும் ஒன்றையொன்று சந்திக்கும் புனிதத்திற்கு நாம் வரவேண்டுமென்றால் நம்முடைய ஜீவியம் பலிபீடத்தில் '**ஜீவபலியாக**' ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று வேதம் கூறுகிறது (ரோமர் 12:1). இந்த உலகத்தில் **இது ஒன்றே 'புத்தியுள்ள' மேலான இலக்காகும்** என இந்த வேதவாக்கியம் கூறுகிறது.

இதுபோன்ற அர்ப்பணம் மனதளவில் யூகித்துக் கொள்வதல்ல. பவுல் இதை திட்டவட்டமாகவே கூறினார்! இந்த ஜீவிய அர்ப்பணத்தை முன்பதிவு செய்து, அதைப் பின் தொடர்ந்து மறுரூபம் அடைந்தார்! ஆராதனைக்குரியவரை அண்டிக்கொள்ளும் அந்த பலிபீட ஸ்தானம் எத்தனை மதிப்புள்ளது! ஆம் "கண்ணீரோடு விதைக்கிறவனே இந்த கெம்பீரமான மகிழ்ச்சியை அறுவடை செய்வான்" (சங்.126:5).

இந்த ஒப்பற்ற ஸ்தானத்தைக் கண்டவர்கள் மாத்திரமே "நீங்களும் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புகொடுக்கவேண்டுமென்று" வேண்டி, கேட்டுக்கொள்வார்கள் (ரோமர் 12:1). இங்குதான் தேவனுடைய கிருபையின் சிங்காசனம் இருக்கிறது! அளக்க முடியாத, தேவனுக்குப் பிரியமான 'அவருடைய சித்தமும்' வாசம் செய்கிறது! (வசனம் 2).

> **நம் சரீரம் ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கப்படுவது, நல்ல ஆரோக்கியமான உயிருள்ள பலியாய் இருக்க வேண்டும்! அது, சாட்சி இழந்த கேடான சரீரமாய் இருந்திடக்கூடாது! நாம் கர்த்தரை சந்திக்கும் நாள்வரைக்கும் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் அப்பழுக்கில்லாமல் 'குற்றமற்றதாய்' ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் (1தெச.5:23).**

இப்போதுள்ள என் ஜீவியம், எவ்வித வேறொரு தெரிந்து கொள்ளுதலுமில்லாமல் தேவனுடைய பரிபூரண சித்தத்திற்கே பலிபீடத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்! இந்த செய்தியை நான் உங்களுக்கு எழுதும்போதே எனக்குள் பாய்ந்தோடும் ஜெபமெல்லாம் "ஓ கர்த்தாவே, என் சித்தமல்ல உம் சித்தம் ஒன்றே ஆகக்கடவது! தயவாய், என்னையும் உம்முடைய மகிமைக்காக பயன்படுத்துவீராக. என் கடந்த காலமெல்லாம் உம் சித்தத்தை எதிர்த்தவன்! 'அது முடியாது!' என கூறியவன்! இவ்வாறு சுயசித்தம் செய்து வாழ்ந்த என்னை **இப்போது** முற்றிலும் உமக்கே அர்ப்பணிக்கிறேன்" என்றே ஜெபித்து நிற்கிறேன்.

**ஆம், என் சொந்த உயிரோட்டமான சரீரம், இப்போது "தேவனே நீர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்" என்ற படைப்பின் ஸ்தலத்தில் வைக்கப்பட்டுவிட்டது!**

*நான் அடையும் மறுரூபம் இந்த ஸ்தலத்தில் தான்! பரிசுத்த சரீரமாய்,* **புதிதாகிய மனமே....** *'கர்த்தருக்கு பரிசுத்தம்' என்ற சிந்தைக்கு வெளியில் செல்லாத, ஒருமனம்! ஆ இது ஆச்சரியம், அல்லேலூயா (சக.14:20).*

*உங்களால் தரமுடிந்ததை மாத்திரமே தேவன் கேட்பார்! "இந்த* **உலகத்தோடு ஒத்தவேஷம்** *தரிக்கவேண்டாம்" (ரோமர் 12:2) எனக்கூறும் வேதவசனம் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த வேத வசனமாகும். அதாவது நீங்கள் கடைப்பிடிக்க முடியாதபடி "ஓர் சன்னியாசியாய்" மாறுங்கள் என்றோ அல்லது "இந்த உலகத்தில் உங்களுக்கு எதுவும் கூடாது!" என்றோ, உங்களால் முடியாத ஒன்றை கூறவில்லையே! இந்த உலகத்தின் காரியம் ஒவ்வொன்றிலும் "மறுரூபமடையவே" வேதம் வலியுறுத்துகிறது (வசனம் 2). இவ்வாறு நீங்கள் கடைப்பிடித்து வாழும்போது "தேவனுக்குப் பிரியமும், அவருடைய பரிபூரண சித்தமும், என்ன? என்பதை நீங்களே அறிந்து கொள்வீர்கள்" என்றல்லவா இந்த வசனம் பூரிப்புடன் கூறுகிறது! ஆகவே பரிசுத்தம் இன்னதென்றும்,தேவனுக்குப் பிரியமான சித்தம் இன்னதென்றும்! இப்போது நாம் தெளிவாய் அறிந்து வாழ்கிறோம். இவ்வித தெய்வ ஆரோக்கியமான நிலையில் மன சஞ்சலமோ அல்லது முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து வாழ்வதைக் குறித்த பாரமோ நமக்கு ஒரு துளியும் ஏற்படுவதில்லை!*

**மெய்யாகவே இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்தவேஷம் தரியாமல்.... மறுரூபமாகும் வாழ்க்கை, மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்ட விருப்ப செயலாகவே மாறிவிடும்!**

*இதை விவரிக்கும் படியே "ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும்! புத்தி சொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும்! அன்பு செலுத்து கிறவன் அன்பு காட்டுவதிலும்... ஆகிய யாதொன்றைச் செய்தாலும், நாம் உற்சாகத்தோடு செய்கிறோம்" என ரோமர் 12:6 முதல் 11 வசனங்கள் வரை வாசிக்கிறோம்.*

**பார்த்தீர்களா? மறுரூபமடைந்த வாழ்க்கையில் காணப்படும் மகிழ்ச்சி அத்தனை பரவசமாயுள்ளது. உபத்திரவங்கள் எதுவாயிருந்தாலும் நம்பிக்கையுள்ள ஜெபம் நமக்கு நிலையான சந்தோஷத்தை தருகிறது எனவும் 12-ம் வசனம் கூறுகிறது!**

*மேலும் இந்த மறுரூபமடைந்த வாழ்க்கையில் ஆசீர்வாதத்தை*

*பிறருக்கு கொடுப்பது மாத்திரமேயல்லாமல், நாம் ஒருவருக்கும் சாபத்தைக் கொடுப்பதில்லை! (வச.14). இத்தனை மகத்துவமான மறுரூபமடைந்த வாழ்க்கையை, கிறிஸ்தவர்களாகிய நாம், இந்த பூமியிலேயே பெற்று வாழமுடியும் என கூறப்பட்டிருப்பது எத்தனை மகிழ்ச்சியாயிருக்கிறது! ஆமென்.*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## 'தேவ வரத்தை தனக்காக பயன்படுத்த மறுத்த' இயேசுவின் மாதிரி!

*எல்லாச் செடிகளும் வாடி வதங்கி, அவைகள் மத்தியில் ஒரு செடி மாத்திரம் செழித்தோங்கி நிற்பதுபோல், பாவ விஷத்தால் நோய் கொண்டு* **வீழ்ந்துபோன மனுஷர் நடுவில், இயேசு ஒருவரே சிறந்த மானிடராய் விளங்கினார்.** *ஆகவேதான், மனுஷனைச் செம்மை யானவனாக உண்டாக்கின நாளில் அகமகிழ்ந்த தேவன் 'இப்போது' இவர் மீது வைத்த பிரியம் கொஞ்சமல்ல! இவர் வார்த்தைகளையும் கிரியைகளையும் கண்ட மனுஷர்களுக்கு உண்டான ஆச்சரியமும் பிரமிப்பும் கொஞ்சமல்ல! "இவர் யாரோ? இவர் எப்படிப் பட்டவரோ?" என்றே பேசிக்கொண்டார்கள். ஆகிலும், அவரை இன்னாரென்று அறிந்து கொள்ளவில்லை.*

*முப்பது வயதில், அவர் யோவானால் ஸ்நானம் பெற வந்தார். அவரை அறியாத ஜனங்கள், தங்களைப்போல அவரும் பாவ மன்னிப்பைத் தேடி வந்ததாக நினைத்தார்கள். யோவானோ 'பாவிகளின் ஸ்நானத்தை' அவர் பெற்றுக்கொள்வது தகாதெனத் தடுத்தார். ஆகிலும் அவருக்குக் கீழ்ப்படிந்து, ஸ்நானத்தைக் கொடுத்து, பிந்தி அதன் இரகசியம் இன்னதென்று அறிந்தார்.*

> **அவர் தமது பாவங்களுக்காக அல்ல, மனுமக்களுடைய பாவத்தைத் தமது பாவமாகப் பாவித்து, பாவிகளுக்கு பரிதபிக்கிறவராக தம்மை அவர்களோடு ஒன்றாக்கினார் என்னும் சத்தியத்தை அறிந்த *யோவான்,* பின்பு அவரைக் கண்டபோது "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி" என சாட்சி கூறினார்.**

*அவர் ஸ்நானம் பெற்ற சமயத்தில், பரிசுத்தாவியைப் பெறுவதற் காக செய்த ஜெபம் கவனிக்கப்படத்தக்கது! வார்த்தைகள் சொல்லப் படவில்லையாகிலும், உத்தேசிக்கக்கூடிதாய் இருந்தது என்ன வென்றால் "பிதாவே! பாவிகளுக்காகப் பரிதபிக்கிறேன். நான் அவர்கள் எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமாகி அவர்களுக்குச் சொந்தமானேன்! அவர்கள் என்னை அறிய மாட்டார்கள். அவர்கள் எவ்வளவோ கெட்டுப் போனார்கள். உமது*

*சித்தம் அவர்களில் நிறைவேறவில்லை. அவர்கள் பாவங்கள் நீங்க வேண்டும். அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும். அதை நிறைவேற்ற எனக்கு* **உன்னத பலம் வேண்டும்.** *அவர்களுக்காக நான் எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக என்னை முழுவதுமாய் உமக்குப் பிரதிஷ்டை செய்கிறேன்" என்பதுபோல் ஜெபித்திருக்கலாம். ஆம், ரோமர் 12:1,2 வசனப்படி "தன்னை ஜீவபலியாக" அர்ப்பணித்து ஜெபித்தார்! அப்போது தொனித்த உத்தர வென்ன? வானம் திறக்கப்பட்டு, தேவன் மனுஷகுமாரனோடு பேசி, தமது தீர்மானத்தைப் பிரத்தியட்சமாய் அவருக்கு வெளிப்படுத்தினார்.* **இரட்சிப்பை நிறைவேற்ற உன்னத பலம்** *அளவில்லாமல் அவருக்கு அருளப்பட்டது. தேவாவியானவர் புறாவாய் அவரை நிரப்பி ஆண்டுகொண்டார். "நீர் என்னுடைய நேசகுமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன்" என்னும் பிதாவின் இனிய சத்தம் தொனித்தது!*

*தண்ணீர் முழுக்கு ஸ்நானம், அடுத்து பரிசுத்தாவியின் ஸ்நானம் முடிந்தபின்பே, வனாந்திர சோதனை! இங்கேதான் அவரது மனுஷீகம் பிரத்தியட்சமாய் விளங்குகிறது. தேவ தன்மைக்குச் சோதனையில்லை, பாவமுமில்லை! அவர் சோதிக்கப்பட்டது மெய்யானால், மனுஷ குமாரனாகவே சோதிக்கப்பட்டார்.* **சோதனைகள் மனுஷனுக்கே உரியது.** *தேவ ஆவியை அளவில்லாமல் பெற்றபின் அவர் சோதிக்கப்பட வேண்டுமோ?*

**ஆம், அவர் பெற்றுக்கொண்ட இப்புதிய வல்லமை சோதிக்கப்பட வேண்டும். இந்த வல்லமையைத் தமக்காக அல்ல, தேவனுக்காகவே உபயோகிக்க வேண்டும் என்கிற சத்தியத்தை இச்சோதனைகளாலே அவர் கண்டறிய வேண்டும்!**

*சோதிக்கப்படும்படி அவரை நடத்தினவரும் ஆவியானவரே! கப்பல் மாலுமி சமுத்திரத்திற்குள் பிரயாணம் போகுமுன், எங்கெங்கே பாறைகள் உண்டென முந்தி அறிந்து கொள்வதுபோல, இவரும் தமது வழிகளில் 'இனி நேரிடக்கூடிய சகல சோதனைகளையும் முன்னறிந்து' அவைகளுக்கு விலகிக்கொள்ளக் கூடியவரானார்! முதல் மனுஷன் சோதனை கண்ணியில் சிக்கி, பாவஞ்செய்து மனுக்குலத்தைக் கெடுத்தான். இரண்டாம் மனுஷன் சோதிக்கப்பட்டும் பாவஞ் செய்யாது "பிசாசின் கண்ணிக்கு" தப்பித்தபடியால், மானிடர் அனைவரையும் இரட்சிக்க வல்லவரானார்!*

*இதுவரை அவரது 'கனி நிறைந்த' ஜீவியம் ஆயத்த காலமா யிருந்தது. இனிமேல் அவரது ஜீவியம், உலகத்தில் இரட்சிப்புக்காக மிகுந்த கனி கொடுக்கப்பட வேண்டும்! தேவனிடத்திலிருந்து*

அளவில்லாத வரங்களைப் பெற்றுக் கொண்டவர், அவைகளை மற்றவர்களுக்குத் தாராளமாய் கொடுக்க வேண்டியது நியாயமே! இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷகுமாரன் வந்தார். அவரது 33½ வருட ஜீவியத்தில், மாசற்ற பரிசுத்தத்தையும், அரிய உபதேசங்களையும், அற்புத கிரியைகளையும் நிறைவாய் செய்து..... முடிவாக, மானிட இரட்சிப்பிற்கு தன்னை ஒப்புக்கொடுத்த மரணத்தையும் காண்கிறோம்! அப்படியானால் என்ன? அவர் தன்னையும் தான் பெற்ற பரிசுத்த ஆவியின் பெலனையும், பிதா அருளின அனைத்து தாலந்துகளையும் 'பிறருக்கே' தந்தருளி இரட்சகரானார்!

– பரமானந்தம் ஐயர்

---

## 'துல்லியமாய் அளந்து' தரப்படும் உபத்திரவங்கள்!

திடீரென்று தன் இளம் மனைவியை ஒரு விபத்தில் இழந்து, தன் பிஞ்சு குழந்தைகளின் பாரம் சுமந்த ஓர் உத்தம விசுவாச சகோதரன் கூறினார்: "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்! இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்" என்ற சங்கீதம் **119:67**-ம் வசனத்தை நான் பலமுறை படித்திருக்கிறேன். ஆனால், என் வாழ்வில் நிகழ்ந்த உபத்திரவத்திற்குப் பின்புதான் "நிஜமாய்" அந்த வசனத்தை அனுபவித்தேன்:

> **இந்த பாடுகள் என்னை மெய்யாய் தேவனிடத்தில் கிட்டி சேர்த்திருக்கிறது! என் ஆவிக்குரிய ஜீவியம் அவ்வளவு சீராய் மாற்றியமைக்கப்பட்டது! இயேசுவின் அடிச்சுவடுகளை கவனமாய் பின்பற்றி மெய்யான இளைப்பாறுதலும் பெற முடிந்தது! என்றார்.**

இதைக்கேட்ட அவரது கிறிஸ்தவ நண்பர், பரிகசித்து சிரித்தார்! "இதோபார், நானும் கிறிஸ்தவ விசுவாசிதான்! நான் விசுவாசிக்கும் தேவன் எனக்கு நல்லதே செய்திருக்கிறார்! இப்போது நான் கட்டிய புது வீட்டைப் பார்! புதிய காரைப் பார்! என் ஒரு பிள்ளை டாக்டர் படிக்கிறான், மற்றொரு பிள்ளை இன்ஜினியர் படிக்கிறான். உனக்கு புத்தி வரட்டும் என நான் கூறுவதைக் கேள்: நான் சுகமாய் வாழும் 'இதுதானய்யா கிறிஸ்தவம்'. பாடுகள், துயரம், சிலுவை சகித்தல்.... இதெல்லாம் கிறிஸ்தவம் என கூறிக்கொள்ள உனக்கு வெட்கமாயில்லை! உன் சுவிசேஷத்தை யார் கேட்பார்கள்? நான் சொல்லும் சுவிசேஷ சாட்சியை நேற்று நடந்த கூட்டத்தில் 5000-பேர் கேட்டு ரசித்து, அல்லேலூயா! என ஆர்ப்பரித்தார்கள்" என பெருமையுடன் கூறினார்! ஈட்டிபோல் துன்புறுத்திப் பேசிய தன் நண்பனுக்கு, அவர்

*வெகு நிதானமாய் பதில் கூறினார்: “தேவன் ஒரு* **டெய்லரைப்போல்!** *அவரவர்களுக்குரிய உபத்திரவத்தை தன் டேப் வைத்து அளந்தளிக்கிறார். மேலும், இன்னொரு இரகசியமும் இந்த டெய்லரைப் பற்றி கேளும்! அவர் நம் தப்பிதங்களையும் பாவங்களையும் மனதில் வைத்து உபத்திரவங்களை அளந்திட மாட்டார்! ஏதோ, தப்பிதம் செய்ததற்கு தண்டித்து, தேவன் இந்த உபத்திரவங்களை எனக்குத் தந்தார், என நீங்கள் எண்ணுவது தவறு!*

**நீங்கள் கூறும் ‘உலக மேன்மை’ சுவிசேஷம் அல்ல..... அது, புகைபோல் ஒழிந்து போகும்! நானோ, நித்திய மகிமை சுதந்தரிக்கவே என்னை கர்த்தரிடம் ஒப்புவித்திருக்கிறேன். நித்திய மகிமை சுதந்தரிக்க உபத்திரவங்கள் அவசியம் என்பதை இயேசு கற்றுத் தந்துள்ளார்!**

*ஆகிலும், “***தாங்கிக்கொள்ளும் பெலன்** *எங்களுக்கு எவ்வளவு உண்டு?” என்பதை மனதில் வைத்தே* **அவரவர் உபத்திரவங்களை அளவெடுத்து** *தைக்கிறார்! ஆவிக்குரிய வளர்ச்சியில் பெலன் கொண்டவர்கள் எவர்களோ, அவர்களுக்கு அவர் எடுக்கும் அளவு விசாலமாய் இருந்து, கடின உபத்திரவமாய் இருந்தாலும், முடிவில் அந்த டெய்லர் அவனுக்கு தைத்து தரும் உடுப்போ மகா ஜொலிப்புடன் மின்னும் “***மகிமையின் ஆடையாய்***” இருக்கும்! என கெம்பீரமாய் பதில் கூறினார் (2கொரி.4:17). அவ்வளவுதான், கேள்வி கேட்டவர் வியப்புடன் வாயடைத்துப் போனார்!*

*– போகிற போக்கில் நண்பருடன்....*

---

## அபிஷேகமில்லாமல் ‘சொந்த தாலந்தில்’ பிரயோஜனமில்லை!

**பி***ல்லி கிரஹாமின் பிரசங்கங்கள் எளிமையாயிருந்தாலும், வல்லமையும் அதிகாரமும் நிறைந்ததாயிருக்கும்! தன்னைப் பற்றி பவுல் கூறிய அறிக்கையே பில்லி கிரஹாமிற்குப் பொருந்தும்: “என் பேச்சும் என் பிரசங்கமும் மனித ஞானத்திற்குரிய நயவசனிப்புள்ளதாயிராமல், ஆவியினாலும் வல்லமையினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தன” (1கொரி.2:5). பில்லி கிரஹாம் பேசும்போது, கூட்டத்தினர் மீது ஆவியானவரின் அசைவாடுதல் தெளிவாய் காணும்படி இருக்கும்! அதை யாராலும் மறுக்க முடியாது! “***பரிசுத்த ஆவி அபிஷேகத்தின்” அவசியத்தை இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அவர் எப்பொழுதும் வலியுறுத்தி பேசுவார்!** *(எபே.5:18). ஆம்ஸ்டர்டாம் 1983-ம் மாநாட்டில், ஒரு மாலைக் கூட்டத்தின் செய்தி, பரிசுத்த ஆவியானவரைப் பற்றியதாய் இருந்தது. அந்த செய்தியை* Campus Crusade for Christ-ன் *நிறுவனராகிய Dr.பில் பிரைட் (1921-2003) அவர்கள் பிரசங்கித்தார்.*

*அவரது பேச்சில் பிரசங்க விளக்கங்கள் இருந்தன! ஆனால் செயலாற்றுதலை நடைமுறைப்படுத்தி அவர் பிரசங்கிக்கவில்லை. பில் பிரைட் பிரசங்கித்து உட்கார்ந்தவுடன், பிரசங்க பீடத்திற்குப் பில்லி கிரஹாம் சென்று "நொறுங்கிய உள்ளத்துடன்" அங்கு உட்கார்ந்திருந்த 5000 ஊழியக்காரர்களுக்கு: "நண்பர்களே, உங்கள் விடுதி அறை களுக்குச் சென்றதும் முழங்காலிடுங்கள்! ஒரு புதிய அபிஷேகத்தைத் தரும்படி தேவனிடம் உறுதியாய் கேளுங்கள்! உங்களுக்கு அபிஷேகம் கிடைத்துவிட்டது என்ற நிச்சயம் வரும்வரை முழங்காலிலிருந்து எழும்பாதீர்கள்!" என சவாலிட்டு கூறினார்!*

**பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தன்மீது இராமல் தன்னால் பிரசங்கிக்க முடியாதென்று பலமுறை அவர் அறிக்கையிட்டிருக்கிறார்!**

*நடுக்கத்தின் காரணமாக, வியர்வையால் நனைந்திருந்த தனது உள்ளங்கைகளைக் கூட்டத்தினரிடம் காட்டி, "நான் தேவனுக்கு முன்பாக பெலவீனமாய் இருக்கிறேன் என்பதை நீங்களே பாருங்கள்! ஆகவேதான், நான்* **பரிசுத்தாவியின் வல்லமையை பெறுவதற்கு,** *ஒவ்வொரு நாளும் கெஞ்சி ஜெபித்து, பெற்று வருகிறேன்!" என பதைபதைத்து பேசினார்! இதைக் கேட்டபோது, ஊழியக்காரக் கூட்டத்திலிருந்த அனைவருமே, உள்ளம் உடைந்து, எழுந்து நின்று.... கரவொலி எழுப்பினார்கள்! பிரசங்கியாராயிருப்பதற்குப் போதுமான தாலந்தோ, திறமையோ, சொல் வளமோ தங்களிடம் இல்லை என எண்ணியிருந்த* **ஊழியர்கள் பலர் அடைந்த ஊக்கத்திற்கு** *அளவேயில்லை எனலாம்! இன்றும், இயேசு சவாரி செய்து வருவது, கம்பீரமான குதிரைகள் மீதல்ல! கனிவான கழுதைகள் மீதே! என நிரூபித்து வாழ்ந்து, ஊழியம் செய்தார் தாழ்மை ஊழியர் பில்லிகிரஹாம்!*

*– பண்டிதர் பில்லி கிரஹாம்*

---

## நம் ஜெபத்தில் 'தினசரி பொருத்தனைகள்' உண்டு!

*நாம் கர்த்தருக்கு உற்சாகமாய் படைக்கிற காணிக்கையைப் போலவே, 'பொருத்தனை' செய்திடும் காணிக்கைகளும் பழைய உடன்படிக்கையில் இருந்தன (லேவி.23:37). 'பொருத்தனை' என்பது, கர்த்தர் எனக்கு இந்த செயலை செய்து முடித்தால் 'நான் இந்த காணிக்கை செலுத்துவேன்' என்பதுதான் பொருத்தனை! அது போலவே* **திருமண வாக்குறுதிகளும்** *பொருத்தனையாகவே கூறப்பட்டு வந்தன. அதாவது, வாழ்க்கைத் துணையாகிய உன்னை ஏற்றுக் கொள்ளும் நான் 'இவ்வித நிபந்தனைக்கு உட்பட்டு' உன்னை ஏற்றுக் கொள்கிறேன் என்ற வாக்குறுதி! எத்தனையோ திருமணங்களில்,*

*அவர்கள் உரைத்த வாக்குறுதிகள் மீறப்பட்டு, விவாகரத்து வரை சென்று விடுகிறார்கள்! அதுபோலவே, 'இதை கர்த்தர் எனக்குச் செய்யும்போது, இவைகளை காணிக்கையாக தருவேன்' என்ற வாக்குறுதிகளையும் ஜனங்கள் மீறி வாழ்ந்திருக்கிறார்கள்!*

இயேசு திறந்தளித்த "புதிய உடன்படிக்கை" வாழ்க்கையில் *கர்த்தர் உரைத்த அனைத்து பிரமாணங்களுக்கும் மனப்பூர்வமாய் கீழ்ப்படிவதே முக்கியத்துவம் பெறுகிறது!*

**தன்னையே பலியாக நமக்கென தந்த ஆண்டவரிடம் 'நீர் எனக்கு இதைச் செய்தால், நான் உமக்கு இதைச் செய்வேன்' என்ற நிலைமாறி "நீர் எனக்கு போதிக்கும் அனைத்திற்கும், நிபந்தனையின்றி மனப்பூர்வமாய் கீழ்ப்படிவேன்" என்பதேயாகும்!**

"ஓ தேவனே, புத்தக சுருளில் நீர் என்னைக் குறித்து எதை எழுதி னாலும் அல்லது எதை என்னோடு பேசினாலும்.... உம் சித்தப்படி செய்ய இதோ, வருகிறேன்!" *(எபி.10:7,9)* என்ற அன்பும், விருப்பமும் நிறைந்த கீழ்ப்படிதலேயாகும்.

இயேசு தன்னுடைய **ஒவ்வொரு நாள் ஜெபத்திலும்,** பிதா தனக்கு உரைத்த அவருடைய விருப்பத்திற்கு "**பாடுபட்டு கீழ்ப்படிந்தார்**" என வாசிக்கிறோம் *(எபி.5:7,8)*. கெத்சமனே ஜெபத்தில் "பிதாவின் சித்தம் அறிந்தவுடன்" கொல்கொதா மேட்டின் சிலுவை பாடுகளுக்கு மனப் பூர்வமாய் கீழ்ப்படிந்தார்! இயேசுவை சந்தித்த சகேயு "நான் ஒருவனி டத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத் தனையாகத் திரும்ப செலுத்துகிறேன்" என கூறினான் *(லூக்.19:8)*. இதுவே, புதிய உடன்படிக்கையின் பொருத்தனை என, கூறலாம்!

*நம் தினசரி ஜெபத்தில், இவ்வித பொருத்தனை நிகழ்ச்சியே இயேசுவுக்கும், அவருடைய ஒவ்வொரு சீஷனுக்கும் நடை பெறுகிறது! "நீர் உணர்த்தும் இந்த காரியத்தில் ஒப்புரவாகுவேன்.... இன்னாரிடம் மன்னிப்பு கேட்பேன்.... பணத்தை திருப்பி கொடுப்பேன்..... அன்பற்ற செயலை சரி செய்வேன்.... சிலரின் நற்பெயருக்கு இழைத்த நஷ்டத்தை ஈடு செய்வேன்.... என தேவனிடம் கூறும் பல்வேறு பொருத்தனைகள்!*

தேவனிடம் நாள்தோறும் ஜெபித்த தாவீது "இப்படியே **தினமும் என் பொருத்தனைகளை** நான் தேவனுக்கு செலுத்துவேன்" என கூறினார் *(சங்.61:1-8)*. ஜெபத்தில் உணர்த்துவிக்கப்பட்ட "பொருத்தனைகளை" இயேசுவின் சீஷர்கள் 'பாடுபட்டு' கீழ்ப்படிந்து நிறைவேற்றுவார்கள்!

*– T. ரத்தினகுமார்*

# புனித மகதலேனாள் (நாகசாகி, ஜப்பான்),
## கிறிஸ்துவுக்காய் குப்பைமேட்டில் எறிக்கப்பட்ட புனிதவதி!



( AD 17)

ஜப்பான் தேசத்தின் நாகசாகியில் பிறந்த மகதலேனாள் பக்தியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார்கள். அந்த அஞ்ஞான தேசத்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பம் நிலைத்திருப்பது மிக அரிது! மகதலேனாள் வாலிப வயதை எட்டிய காலத்தில், பெற்றோர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை மறுதலிக்காதபடியால் 1620-ம் ஆண்டு கொல்லப்பட்டார்கள். தன் பெற்றோர்களின் வீரமான கிறிஸ்தவ விசுவாசத்தை கண்ணுற்ற மகதலேனாள் விசுவாசத்தில் மிக உறுதி கொண்டவளாய் மாறினாள்.

கிறிஸ்துவின் இரத்த சாட்சியாய் பெற்றோர்கள் பலியான அந்நாட்களில் 'அகஸ்தினியன் மிஷனெரி' குழுவினர் ஜப்பான் ஊழியத்திற்கு தைரியமாய் பிரவேசித்தார்கள். கிறிஸ்துவுக்கு முழு அர்ப்பணமாய் வாழ்ந்த மகதலேனாள், அந்த கிறிஸ்தவ மிஷனெரிமார்களோடு வெகு சீக்கிரத்தில் இணைந்து கொண்டார். அவர்களுக்கு மொழிபெயர்ப்பாளராகவும் ஒரு சிறிய சபைக்கு ஜப்பான் மொழியின் உபதேசியராகவும் அரும்பாடுபட்டு ஊழியம் செய்தார். "தேவனை மிகத் தீவிரமாய் தேடும்" ஒரு நல்ல ஆவிக்குரிய குழுவாய் அகஸ்தினியன் மிஷனெரிகள் இருந்ததைக் கண்டு மகதலேனாள் அந்த குழுவில் மிகத் தீவிரமாய் கர்த்தருக்கு ஊழியம் செய்தாள். 1625-ம் ஆண்டு மகதலேனாள் அகஸ்தினியன் மிஷனெரி குழுவில் முக்கிய அங்கமாய் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

இக்காலத்தில், ஜப்பானில் கிறிஸ்தவர்களுக்கு அதிகமான உபத்திரவம் ஏற்பட்டது. அந்த உபத்திரவத்தில் மகதலேனாள் ஒரு தூர மலை பிராந்தியத்திற்கு சென்று விட்டார்கள். அங்குள்ள மக்களுக்கு இயேசுவை பிரசங்கித்து ஒரு விசுவாச குழுவினரை உருவாக்கினார்கள். அந்த 1632-ம் ஆண்டு அகஸ்தினியன் தலைவர் பிரான்சிஸ் அவர்களும் அந்தோணி சிமியோன் அவர்களும் ஜப்பானில் தீக்கொளுத்தப்பட்டார்கள். இந்த செய்தி, மகதலேனாளை இன்னும் அதிக வைராக்கியம் கொண்டவளாய் மாற்றியது. அடுத்தடுத்து நடந்த சம்பவத்தில் அகஸ்தினியன் மிஷனெரி குழுவிலிருந்த மிகச்சிறந்த தலைவர்கள் கொல்லப்பட்டார்கள், இதையெல்லாம் கண்கூடாக பார்த்த மகதலேனாள் "அகஸ்தினியன் மிஷனெரி குழுவின் தியாக ஆவியை" தனக்குள் பருகி ஊழியம் செய்தார்கள். கிறிஸ்தவ விசுவாசத்திற்காக மகதலேனாள் சிறைப்பட்டபோது இயேசுவை மறுதலிக்க மறுத்தது மாத்திரமல்லாமல் "நான் இயேசுவை பின்தொடரும் சீஷி!" என உரத்த சத்தமாய் அறிக்கை செய்தார்கள். 13 நாள் கொடிய உபத்திரவத்திற்குப் பின்பு, மகதலேனாளை ஒரு குப்பை தொட்டியில் தலைகீழாய் தொங்கவிட்டு எரித்து சாம்பலாக்கினார்கள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## இயேசு சிந்திய இரத்தத்தின் மிக உயர்ந்த புண்ணியம் "சுத்த மனசாட்சி"

கிறிஸ்தவ பரிசுத்த வாழ்க்கைக்கு மனசாட்சி இன்றியமையாத ஒன்றாகும். அதிலும் தேவனுடைய ஊழியம் செய்வதற்கு அது இன்னும் வெகு முக்கியமானதாகும்! தேவ ஊழியனாகிய தீமோத்தேயுவுக்கு "நீ விசுவாசமும் நல் மனசாட்சியும் உடையவனாயிரு" (1தீமோ.1:18) என்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் எழுதினார். நாம் இணைந்திருக்கின்ற சபைகளில், நாம் பக்தி வைராக்கியம் காண்பித்து விசுவாசத்தை நிரூபித்து காண்பிக்கும் ஆற்றல்கள் நமக்கு இருக்கலாம். **ஆனால், நல் மனசாட்சியில்லாமல் நமது விசுவாசத்தை காண்பிப்பது ஒன்றுக்கும் உதவாது.** விசுவாசத்திற்கு சாட்சியாக ஜீவித்தார் என்று நாம் மக்களால் பாராட்டுகள் பெற்றும் நம்மிடம் நல்மனசாட்சி இல்லையென்றால் அதினால் யாதும் பயன் கிடையாது. நமது தேவ ஊழியங்கள் ஆசீர்வாதமாயிருப்பதற்கு, நல்ல பரிசுத்த மனசாட்சி அத்தியந்த அவசியமாகும்.

ஒரு மனிதன் நல்ல மனச்சாட்சிக்கு நேராக தனது வாழ்க்கையை கொண்டு செல்லும்போது மாத்திரமே, அவன் ஒரு நல்ல கிறிஸ்தவனாகின்றான். அதுமாத்திரம் அல்ல, அவன் தனது ஆண்டவருக்கு ஒரு நல்ல சாட்சியாகவும் வாழ்கின்றான். தேவனால் முன்குறிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை அவன் சுதந்தரித்தும் கொள்ளுகின்றான். அப்படிப்பட்ட நல் மனச்சாட்சியுடைய கிறிஸ்தவன், தனது முழு வாழ்க்கையையுமே கர்த்தருக்கு கையளித்து, தனது வாழ்வின் ஒவ்வொரு காரியத்திலும், கர்த்தரிடம் ஆலோசனை கலந்து "ஆண்டவரே, நான் அங்கு செல்லலாமா?" "இந்த காரியத்தில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?" "நான் அந்த மனிதனோடு எவ்வாறாக பேச வேண்டும்?" இப்படியாக தனது ஒவ்வொரு காரியத்திலும் ஆண்டவரோடு தேவ ஆலோசனை கலந்து நடக்கின்றான். ஆ, அதுவே, நல்மனச்சாட்சியுள்ள ஒரு கிறிஸ்தவனின் அலங்கார ஆவிக்குரிய வாழ்க்கை!

உங்களுடைய மனச்சாட்சியில் ஏதாவது தவறுகள் இருப்பின் அதை இப்பொழுதே ஆண்டவரிடம் அறிக்கையிடுங்கள்! அதை உடனே சரிப்படுத்திக் கொள்ளுங்கள். **கறைப்பட்ட துர்மனச்சாட்சியோடு உங்கள் நாளின் வேலைகளைத் துவங்க வேண்டாம்.** தேவன் உங்களுக்கு மன்னித்து உங்கள் கறைப்பட்ட மனச்சாட்சியை சுத்திகரித்து, உங்களுக்கு ஒரு சுத்தமானதும், பெலமுள்ளதுமான நல் மனச்சாட்சியை கொடுக்க வல்லவராக இருக்கின்றார். இன்றே அவரண்டை வாருங்கள். இயேசுவின் இரத்தம் உங்கள் 'முந்திய பாவக்கறைகளை' போக்குவது மாத்திரமல்லாமல், இன்று நீங்கள் தைரியமாய் வாழவேண்டிய 'சுத்த மனச்சாட்சியும்' தருவார் என்பதை விசுவாசித்து வாழுங்கள்!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.